விலை ரூபா 1-2

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 18 ஆவணி 9 ஜுல்கஃ 18 இதழ் 196

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 25-8-1986

பாணந்துறையில்

## குமாரணதுங்க கூட்டத்தில் குண்டுவெடி; 4பேர் காயம்

[நமது நிருபர்]

ஸ்ரீலங்காமக்கள்கட்சி செயலாளர் விஜயகுமாரணதுங்க கலந்து கொண்ட பொதுக் கூட்டமொன்றில் குண்டொன்று வெடித்ததில் 4 பேர் காயமடைந்தனர்.

நேற்றிரவு பாணந்துறையில் இப்பொதுக்கூட்டம் இடம் பெற்றது.

திரு. விஜயகுமாரணதுங்க அரசாங்கத்தின் இனப்பிரச்னைத் தீர்வுக்கான மாகாண சபை விவகாரம் குறித்து இக் கூட்டத்தில் உரைநிகழ்த்தினார். அவர் உரையாற்றிக் கொண்டிருந்த வேளையிலேயே குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

இக்குண்டுவெடிப்பில் காயமடைந்தோர் கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தொடர்ந்து பொலிஸார் ஸ்தலத்தில் தீவிர பாதுகாப்பு வேலைகளில் இறங்கியிருந்தனர். [மா]

● நேற்றைய ஷெல் பிரயோகம்:

முன்னாள்கிரிக்கெட்வீரரான ஹற்றன் நாஷனல்

# வங்கி முகாமையாளர் உட்பட

# 4 பேர் பலி; 25 பேர் காயம்!

(நமது நிருபர் ஐ. சண்முகலிங்கம்)

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந் நேற்றுமாலை மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' பிரயோகத்தின்போது, முன்னாள் பிரபல கிரிக்கெட் விளையாட்டு வீரரும், யாழ். ஹற்றன் நாஷனல் வங்கி முகாமையாளருமான எஸ். சூரியகுமார் (35 வயது) உட்பட 4 பேர் கொல்லப்பட்டனர்; 25 பேர் காயமடைந்தனர்.

இறந்தவர்களில் ஒருவர் இளம்பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது. நேற்றைய ஷெல் தாக்குதல் மாலை 4-30 மணி முதல் இரவு 7 மணிவரை நீடித்தது.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவுக்கு முன்னால் சிலயார் தூரத்தில் இரண்டு 'ஷெல்'கள் வீழ்ந்தன.

கோட்டைப்பகுதியிலிருந்து துப்பாக்கி வெடிச்சத்தங்கள் தொடர்ச்சியாகக்கேட்டதைத் தொடர்ந்து 'ஷெல்' தாக்குதல் ஆரம்பமாகியது.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கும், யாழ். வெளி நோயாளர் பிரிவுக்கும் இடையில் உள்ள ஆஸ்பத்திரிவீதிப் பகுதியிலேயே அநேக ஷெல்கள் வந்து வீழ்ந்துவெடித்தன.

இவ் வீதயிலுள்ள புத்தகக் கடையொன்றில் கடமையாற்றிக் கொண்டிருந்த றெஜி பீ. ஸ் (18 வயது) என்றஇளம பெண் கழுத்தில்ஷெல்தாக்கியதில் ஸ்தலத்திலேயே பலியானார்.

வாகனச் சாரதியான எஸ். முத்துக்குமாரு (45 வயது) என்பவர் யாழ் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவுக்கு முன்னால் நின்றிருந்த சமயம்

(4ம் பக்கம் பார்க்க)

நாவற்குளி, கோட்டை

## ராணுவத்தினர் மீது போராளிகள் தாக்குதல்

[நமது நிருபர்]

நாவற்குளியிலிருந்தும் கோட்டை இராணுவ முகாமிலிருந்தும் நேற்று வெளிவந்த இராணுவத்தினரை எதிர்த்து தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இச்சமரின்போது இராணுவத்தினர் தரப்பில் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் காயமடைந்ததாகவும் அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

நேற்றுக்காலை 11 மணியள

[4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு மாகாணசபைக்கும்

## மேல்நீதிமன்று அமைக்க கூட்டணி கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு

ஒவ்வொரு மாகாணசபைக்கும் தனித்தனியாக மேல் நீதிமன்றமொன்றும், நீதிமன்ற அமைப்பொன்றும் உருவாக்கப்படவேண்டும் என கூட்டணி அரசிடம் கோரியுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் அரசு - கூட்டணிப் பேச்சுக்களின் போதே இக்

(4ம் பக்கம் பார்க்க)

## 'ரெஸோ', பொதுமக்கள் தீவிர முதலுதவிச் சேவை!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ், கோட்டை முகாமிலிருந்து நேற்று மாலை ஏவிவிடப்பட்ட 'ஷெல்' தாக்குதல்களினால் படுகாயமடைந்தவர்களை யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று அனுமதிப்பதில் 'தமிழீழ மாணவர் பேரவை' (ரெஸோ) அம்புலன்ஸும் சேவையிலீடுபட்டிருந்தது.

படுகாயமடைந்தவர்களுக்கு 'ரெஸோ' மாணவர்களும் பொதுமக்களும் நேற்றிரவு வரை இரத்ததானம் வழங்கிக் கொண்டிருந்தனர்.

### புலிகள் பாராட்டு

''எம் மக்களை பாதுகாக்கும் முயற்சியில் பலத்த ஷெல் தாக்குதலின் மத்தியிலும் தம்

(4ம் பக்கம் பார்க்க)

## அன்னையர் முன்னணி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங்கள்.

ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயம் நடைமுறைப்படுத்தப் படவிருப்பதை ஆட்சேபித்து யாழ் மக்கள் நடவடிக்கைக் குழுவும், ஏனைய வெகுஜன அமைப்புகளும், தொழிற் சங்கங்களும் இணைந்து எதிர்வரும் 27ம் திகதிபுதன்கிழமை நடத்தவுள்ள ஊர்வலத்தில் அன்னையர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அன்னையர் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது. [ச]

மலையகத்தின்

## 3 பொலிஸ் பிரிவுகளில் 18 சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, ஞாயிறு

மலையகத்திலுள்ள 3 பொலிஸ் பிரிவுகளிலிருந்து 18 தீவிரவாத சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாகவும், இவர்கள் வட பகுதி மார்க்ஸிஸ ஸ்தாபனமொன்றின் அங்கத்தவராயிருக்கலாமென சந்தேகிக்சப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின்போது இவர்களில் சிலர் கெரில்லாப் பயிற்சியளிக்கும் திட்டங்களுக்

(4ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சிப்பகுதியில்

## மூடப்பட்ட பாடசாலைகள் முதலாம்திகதி திறக்கப்படும்

யாழ்ப்பாணம், திங்கள்

கிளிநொச்சி கல்வித் திணைக்கள பணிமனை செப்டம்பர் முதலாம் திகதி தொடக்கம் அதன் நிரந்தரக் கட்டிடத்தில் [கரடிப்போக்குக் சந்திக்கருகாமையில்] இயங்கவிருக்கின்றது.

மேலும் கிளிநொச்சிப் பகுதியில் இதுவரை காலமும் கலவரப் பிரச்னைகளால் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் அனைத்தும் முதலாம் திகதியிலிருந்து மீண்டும் திறக்கப்பட்டு வழமை போல் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி - முல்லைதீவுப் பகுதி கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் இத்தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

மூடப்பட்டுள்ள கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், சிங்கள மகா வித்தியாலலம், சென். திரேசா மகளிர் வித்தியாலயம், கனகபுரம் வித்தியாலயம், கனிஷ்ட மகாவித்தியாலயம் ஆகியவையே மீண்டும்

(4ம் பக்கம் பார்க்க)

## "அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்"

கொழும்பு, ஞாயிறு

"கொழும்பில் கூட்டணிக்கும், அரசாங்கத்துக்குமிடையே தற்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்கள் வெற்றிபெற அரசாங்கத்துக்கு மக்கள் தமது ஒத்துழைப்பைநல்கவேண்டும்".

(4ம் பக்கம் பார்க்க)

இலங்கையில்

## பேச்சுக்கள் முடிவுற்றதும் கூட்டணி - ராஜீவ் சந்திப்பு!

கொழும்பு, ஞாயிறு

கொழும்பில் தற்போது நடைபெற்றுவரும் அரசு-கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்ததும் கூட்டணிக் குழுவினர் புதுடில்லி சென்று ராஜீவைச் சந்திப்பர் என தெரியவந்துள்ளது. இப்பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து அப்போது அவர்கள் ராஜீவிடம் நேரடியாகத் தெரிவிப்பர்.

இதேவேளை கூட்டணிக்கும் அரசுக்குமிடையே நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் மாகாணசபைகளின் சட்டம் ஒழுங்கு, காணிக்குடியேற்றம் போன்ற விஷயங்களின் அரசியலமைப்பு வடிவம் பற்றிய்ய ஆராயப்பட்டது எனத் தெரியவருகிறது.

தற்போது கொழும்பிலுள்ள கூட்டணிக்குழு எப்போது இந்தியா செல்லும் என்பது இன்னமும் அறிவிக்கப்படவில்லை. [கூ-ஊ]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சில்லறைக்கடைத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு 71, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [C 4218]

20 கார் பற்றிகள் ஒரே தடவையில் சார்ஜ் செய்யக் கூடிய CRIPTON பற்றி சார்ஜர் விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ளவும்: TELE-RADIO, No 1 Super Market Urumpirai. (C4223)

யாழ்ப்பாணம், யாழ். வீதியில் 1¼ பரப்புக் காணியும், தொடர் வீடுகளும் விற்பனைக்குண்டு. வீடுகளை ஸ்ரோராகவும் பாவிக்கலாம். தொடர்பு கொள்ளவும்: நா. ஸ்ரீரங்கநாதன், 6, கன்னதிட்டிரோட், யாழ்ப்பாணம். [C4238]

வீட்டுத் தளபாடங்கள், குளிர்சாதனப் பெட்டி, Radio Cassette Recorder (three in one) ஏனைய வீட்டு பாவனைப் பொருட்களும் விற்பனைக்குண்டு நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி சுமதி பிரபாகரன், 2.9, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சிறிதரன் மரக்காலை முன்பாக.) C 4167

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

நல்லூரில் சகாயவிற்பனை-நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பர விற்பனைக் காட்சிச் சாலையில் ரூ 15/- ற்கு எமது தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு அழகியபொலித்தீன் பாக்கும், மில்க்வைற் செய்தியும், அறிவு நூல்களும், கீரைவிதைப் பைக்கற்றும் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும். மேலுறைகள் சேகரித்துவைத்திருப் போர் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற் யாழ்ப்பாணம். (A1172)

நவீன உபயோகித்தவீட்டுத் தளபாடங்கள். T. V, டெக், சிங்கர் தையல்மெஷின், மின் விசிறி, Bath Tub, தொட்டிகள், Baby Cot, Imported T. V. Stand, Pyrex, கிளாஸ் வகைகள், பித்தளை பொருட்கள், Show case, கண்ணுடி மேசைகள், Gas அடுப்பு, எழுதுமேசைகள், கட்டில் மெத்தைகள், புத்தக அல்மாரி ரீசெற், எலக்ரிக் குக்கர், பெற்றேமாச், கேற்றல், நேசறிஉபகரணங்கள் மற்றும்பல உடன் விற்பனைக்குண்டு M Thiagarajan, 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C4217)

கலர் பிலிம் சுருள்களை PROCESSING+PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ (A 1041)

## தேவை

ஆர்வமுள்ள விற்பனையாளர் (18-25) வயதுக்குட்பட்டவர்கள் தேவை. ஆண் பெண் இருபாலாரும் தகைமைகள் நற்சாட்சிப்பத்திரத்துடன் உடன் விண்ணப்பிக்கவும் யாழ். மாநகரசபை எல்லைக் குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். [C4230]

## சேவை

திருமணம் நிறைவேற்றுதல் சிறந்த பொருத்தத்துடனும், வரதட்சணையுடனும் ஒழுங்கு செய்து கொள்ளவும் காணி, வாகனம், கொள்வனவு, விற்பனவு ஒழுங்குக்கும் இன்றே நாடுங்கள்: தர்சினீஸ் அரசடிச்சந்தி, சுதுமலை கிழக்கு, மானிப்பாய். (C 4098)

தரமான தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகள், ரோணியோ பிரதிகள் தமிழ்-ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கு: கிளீன்கட் இல; 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல; 22823. (C4°34)

Typewriters (தட்டச்சு இயந்திரங்கள் Standard portable) வாங்கவோ, விற்கவோ, அல்லது மாற்றவோ, அத்துடன் சிறந்த முறையில் திருத்தியும் கொடுக்கப்படும், தொடர்பு கொள்ளவும். Fudo Enterprises, 39/7. மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C 4205)

### முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வி சண்முகராசா யோகிதா

நாவற்குளி கிழக்கு, வேலம்பிராய் அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த சண்முகராசா குணராணி தம்பதிகளின் செல்வப்புதல்வி ''யோகிதா'' இன்று (25-08-86) தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், சித்திமார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் பல்கலைகளும் பெற்றுபல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள். (C 4201)

## வகுப்புக்கள்

Spoken English புதிய பிரிவுகள். காலை/மாலைநேர வகுப்புகள் ஆரம்பம் 25-08-86 காலை 6-7 மணி. மாலை 6-7 மணி. ஆசிரியர் S B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். [C 4171]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பதவி வெற்றிடம்

### பண்டசாலையாளர் தரம் II [அமயம்]

பதவிக்கான விண்ணப்பங்கள் தகுதியான ஆட்களிடமிருந்து 1986-09-12ம் திகதிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பதவி**

பண்டசாலையாளர் தரம் II [அமயம்]

**சம்பளம்**

நாளொன்றுக்கு 28:80 ரூபா

**தகைமைகள்**

1. இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் சிங்களம்/ தமிழுடனும் தூயகணிதம் எண்கணிதம்/ வர்த்தக கணிதத்துடனும் க.பொ.த. [சாதாரண தரம்] பரீட்சையில் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
2. அங்கீகரிக்கப்பெற்ற களஞ்சிய அறையொன்றில் குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் அனுபவமுடையவராக இருத்தல்வேண்டும்.
3. நாற்பது வயதுக்குமேற்பட்டவராக இருத்தலாகாது.

**குறிப்பு**

ஆங்கிலத்தில் வாசிக்கும் எழுதும் ஆற்றல் மேலதிக தகைமையாகக்கொள்ளப்படும்.

**தெரிவு**

உளச்சார்பறி பரீட்சையொன்றின் மூலமும் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமும் நடைபெறும்.

இவ்வலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல்வேண்டும். அஞ்சல் மூலம் படிவங்களையும், இதர விபரங்களையும் பெறவிரும்புவோர் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23X10 செ. மீற்றர் அளவுக் கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளிலிருந்து விண்ணப்பம்செய்வோர் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1986 ஆகஸ்ட், 5ம் தேதி. (A 1181)

## வலி-கிழக்கு. தெ. ப. ப. நோ. கூ. சங்கம் அறிவித்தல்

வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தில் 3600 வரையிலான வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/-உம், கேள்விப்பத்திரம் ஒன்று ரூபா 1/-ம் செலுத்தி சங்க வேலை நாட்களில கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 05-09-86ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.
நீர்வேலி,
1986-08-21. (A 1177)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

## இராமநாதன் மண்டபத் திருத்த வேலைகள் (உள்சீலிங் அமைத்தல்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்குறிப்பிட்ட வேலையை மேற்கொள்வதற்காக தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. ஒப்பந்தக்காரர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அல்லது கட்டடத்திணைக்களத்தில் ரூபா 4லட்சத்திற்கு பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இதற்கான கேள்விப்பத்திரங்களையும், படவரைபுகளையும் ரூபா 200/-ஐ கட்டணமாகச் செலுத்தி செப்ரம்பர் மாதம் 1-ம் திகதி வரை வேலைப்பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித்திகதி 05-09-86 முற்பகல் 10 மணி ஆகும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (A 1183)

### 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் கந்தசாமி கப்பித்தான் சபாபதி

தோற்றம்: 20-07-49
மறைவு: 26-07-86

அன்பு மகனே! தலைவ! தந்தாய்! அண்ணா! எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்து அன்புடனும், பாசத்துடனும் வளர்த்து அயராது உழைத்து எங்களை வாழவைத்த அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர். (C 4235)

### பத்தாவது ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி இரத்தினம்பிகை நல்லையா

தோற்றம்: 29-03-1916
மறைவு: 14-09-1976

அன்பின் இலக்கணமாய் பண்பின் பிறப்பிடமாய் எங்கள் எல்லோர் உள்ளத்திலும் நீங்காமல் நிறைந்திருந்து, குடும்ப விளக்காய் ஒளி வீசிய தெய்வமே! உங்கள் உடல் சிதைந்து விட்டாலும் எங்கள் இதயத்தை விட்டகலாத 10-வது ஆண்டு தினமாகிய இன்று (25-08-1986) திங்கட்கிழமை உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவனும், பிள்ளைகளும், மருமக்களும், பேரப்பிள்ளைகளும்.

195, சிவன்பண்ணைவீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (C1182)

### 45ம்-நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தம்பிராசா ஸ்ரீரதன் (உரிமையாளர் கண்ணன் லொறிச்சேவை)

தோற்றம்: 22-02-1955
மறைவு: 13-07-1986

13-7-86ல் இயற்கை எய்திய தம்பிராசா ஸ்ரீரதன் அவர்களது வீட்டுக்கிருத்தியம் 26-08-86 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிமுதல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும் நண்பர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் அவரின் இறுதிக்கிரிகையினைச் சிறப்பாக நடத்துவதற்கு உதவியவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

வ. நா. தம்பிராசாவும் குடும்பத்தினரும்.
''மன்னர் எக்ஸ்பிரஸ்''
கே. கே. எஸ் வீதி,
இணுவில். (C4240)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## மணிவாக்கு

ஒரு வர்த்தகரைச் சந்திப்பதாயின் அவரது வேலை நேரத்தில் மாத்திரம் சந்தித்து உங்கள் வேலையை முடித்துக்கொண்டு உங்கள் பாட்டில் போங்கள். ஏனெனில் அவர் தமது வேலையை முடிப்பதற்கு அவருக்கும் அவகாசம் தேவை.

—வெலிங்டன் பிரபு

# நமது நோக்கு

## பெற்ரோலியப்பொருள் முகவர் நிலையங்கள்

தமிழ்ப் பகுதிகளுக்கு, குறிப்பாக யாழ் குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்கள் வந்து சேர்வதில் உள்ள சிரமங்களைச் சொல்லத்தேவையில்லை.

எங்கும் போராட்ட சூழ்நிலை நிலவுவதால் வெளி மாகாணங்களிலிருந்து இப்பொருள்களைக் கொண்டு வந்து சேர்ப்பதில் வர்த்தகர்கள் பெருங்கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள். இதனால் இயற்கையாகவே விலைகள் அதிகரிப்பது ஒருபுறமிருக்க சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு அதிகலாபம் தேடுவதில் பலர் இறங்கிவிடுகிறார்கள்.

இதில் ஒன்று பெற்றோலியப் பொருள்கள் எனக் கூறின் மிகையாகாது. கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக பெற்றோலியப் பொருள்களுக்கு அடிக்கடி தட்டுப்பாடு ஏற்பட்டு வந்துள்ளதுடன், கிடைக்கும் பொருள்களும் நிமிடத்துக்கு நிமிடம் விலைமாற்றம் பெற்றுவந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது குறிப்பாக மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்கள் இதில் அடங்கும்.

கிராமங்களிலும், புறநகரப் பகுதிகளிலும் சட்டவிரோத மின்பாவனைகள் அதிகரித்தமைக்கு பெரும்பாலும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடும் விலையேற்றமுமே காரணம் எனச் சொல்லலாம். வசதியற்ற ஏழைமக்கள், தம் வீடுகளில் விளக்கேற்றுவதற்கு மண்ணெண்ணெய் கிடையாமையால், மின்சாரத்தை சட்டவிரோதமாகப் பயன்படுத்த ஆரம்பித்தனர். இதனால் மின்சாரசபையும் அதற்குரிய சாதனங்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசுக்குத்தானே இதனால் நட்டம் என்று கருதப்பட்டபோதிலும், மின் ராசாதனங்கள் பழுதடைந்து இப் பிரதேசம் முழுமையாக அந்தகாரத்தில் ஆழ்ந்து போகும் அபாயம் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையைத் தவிர்ப்பதற்கு இப்பொழுது ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதைப் பார்க்கின்றோம். பல இடங்களிலும் மின் ஊழியர்கள் உள்ளூர் இளைஞர்களின் ஒத்துழைப்புடன் சட்டவிரோத மின்பாவனையைத் தடுத்துவருகின்றார்கள்.

இந்த முயற்சியை பொதுநோக்கர்கள் மெச்சி வரவேற்றுள்ள அதேசமயம் அடிக்கடி உருவாகும் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாட்டால்ஏழைகள் பாதிக்கப்பட்டு வீடுகளில் விளக்கேற்ற முடியாமல் தவிக்க நேரிடுமோ என அங்கலாய்த்தார்கள். இப்பொழுது இதற்கும் ஒரு வழிபிறந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

பெற்றோலியப் பொருள்களை அங்கீகரிக்கப்பட்ட முகவர் ஸ்தாபனங்களே முறையாக தருவித்து கட்டுப்பாடானவிலைகளுக்கு அவைகளை விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன இதற்கென ஒரு சங்கம் நிறுவப்பட்டு, இந்தமுகவர்களின் நலன்கள் பாதிக்கப்படாமல் இருக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்தஏற்பாட்டை இப்பிரதேச மக்கள் வெகுவாக வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. பெட்ரோலியப்பொருள்கள் கட்டுப்பாட்டுவிலையிலும் தாராளமாகவும் கிடைக்க இதனால் வழியேற்படும் என்று எதிர்பார்க்கலாம்.

பெட்ரோல் முதலியவற்றில் செய்யப்பட்டுவந்த கலப்படம், அதீத லாபம், செயற்கைத் தட்டுப்பாடு முதலியவை நீங்கிவிடும். நல்ல நிலையிலுள்ள வாகனங்களின் யந்திரங்கள் கலப்பட எண்ணெய்களினால் விரைவாகப் பழுதடைந்து போவதும் குறையும்.

எனவே பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த முகவர் நிலையங்களால் தருவிக்கப்படும் பெட்ரோலியப் பொருள்கள் தரமானவையாக இருப்பதற்கும், நெருக்கடியான சமயங்களில் தட்டுப்பாடு ஏற்படாத விதத்திலும் சம்பந்தப்பட்டவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

# மயிலிட்டி கடல்தொழில் துறைமுக அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்குக!

யாழ் மாவட்டத்தின் ஒரேயொரு கடற்றொழில் துறைமுகம் மயிலிட்டியில் அமைந்துள்ளது இலங்கையின் வடகரையோர மீன்பிடித்தொழிலை அபிவிருத்திசெய்யுமுகமாக இத்துறைமுகம் 1965—1970ம் ஆண்டுகாலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டது.

1981ம் ஆண்டு காலப்பகுதியில் இத்துறைமுகத்தின் நீரிணைத் தடுப்புப்பகுதி (Break Water, Groyne) சிதைவுற ஆரம்பித்தது 1984ம் ஆண்டு இச் சிதைவு வியாபித்து, நீரிணைத் தடுப்புப்பகுதியின் ஒரு பகுதி முற்றாகச் சேதமடைந்தது.

## மக்கள் கருத்து

இச் சேதவிபரங்கள் பற்றி இலங்கைக் கடற்றொழில்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்துக்கு சுட்டிக்காட்டப்பட்டது. தங்களிடம் நிதிவசதி இல்லையென்பதை சுட்டிக்காட்டிய கூட்டுத்தாபனம், இத் திருத்த வேலைகளுக்கான நிதியைப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்குமாறு யாழ் மாவட்ட அமைச்சைக் 18-4-84ல் கோரியது. ஆனால் இதுவரை இதற்கான நிதி ஒதுக்கீடுசெய்யப்படவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் கடற்றொழில் அமைச்சோ. அல்லது இலங்கைக் கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனமோ யாழ்மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடுசெய்யமாட்டார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. ஆகவே இவ்வேலைகள் கடற்றொழில் அமைச்சைச் சேர்ந்தது என்றோ அல்லது கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்தது என்றோ கருதி யாழ் மாவட்ட அமைச்சு இவ்வேலைகளுக்கான நிதியை ஒதுக்காமல் புறக்கணிப்பது அழகல்ல. இத்துறைமுகம் சேதமடைவதால் ஏற்படும் விளைவுகள் மூலம் பாதிக்கப்படுவது யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் தான் என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணரவேண்டும்.

1987ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் போது, ''மாவட்ட முன்னுரிமைத் திட்டத்தின்'' கீழ், இத்துறைமுகத் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல்வேண்டும்

யாழ். அரச அதிபர். பிரதி திட்டமிடல் பணிப்பாளர், யாழ் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலர் ஆகியோர் இதுவிடயத்தில் கூடிய கவனம் செலுத்தி இதற்கான நிதி ஒதுக்கீடுசெய்யப்படுவதற்கு வழிவகை காண்பார்கள் என நம்புகிறோம்.

து. மு. சிவபாதம்
செயலாளர்
மயிலிட்டி கடற்றொழிலாளர் நலன்புரிச் சங்கம்,

## ஈழம்வாழ ஆதீனக் கொடையளித்த அருளாளர்

மு. கந்தையா

தமிழகத்தில் திருவாடுதுறை யாதீனம், தருமபுர வாதீனம், குன்றக்குடி ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம் முதலியன இருத்தலை நினைந்து ஈழத்தார் தமிழகத்தைப் பெருமையாகக் கருதிய காலம் ஒருகாலம். இதே ஈழத்தில் நல்லையாதீனம் என ஒன்று தலைநிமிர்ந்தெழுந்திருப்பதைக்கண்டு தமிழகத்தார் ஈழத்தைப் பெருமையாகக் கருதுங்காலம் இக்காலம்.

இருபதாண்டுகள் முன்பாகவே ஈழத்துக்கு இப்பெருமை நிகழவைத்தவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். நமது நல்லூர்ப் பெருமான் திருக்கார்த்திகை யுற்சவங்கொண்டருளும் புனிதநன்னாளாகிய இன்று 20 ஆவதுபீடாரோஹண நினைவு விழாக்கொண்டாடப்படும் பரமாசாரிய சுவாமிகள் ஈழத்துச் சைவகலாசார அரங்கில் என்றென்றைக்கும் அழியாத இடம்பெற்றவர்கள். சைவாசார விருப்பமும், சிவபக்திநேசமும் பண்ணிசைப் பிரியமும் வாய்ந்தவர் சான்றோர் உள்ளங்களில் மட்டுமன்றிச் சாதாரண சைவத்தமிழ் மக்கள் சிந்தனையிலும் நீங்கா நினைவாக நிழலாடிக் கொண்டிருப்பவர்கள்.

இவர் பூர்வ புண்ணிய வசத்தால் தமக்கு வாய்த்த இசைத்திறன், தமிழ்த்திறன் இரண்டினையும் திருமுறைப் பண் விநியோகத்திறகும் சிவகதைக் கதாப்பிரசங்கங்களுக்கும் திறம்படப் பிரயோகித்தார். இசைமேதைகளும்கதாப்பிரசங்க மேதைகளும், ஓதுவா மூர்த்திகளும் இவர்களின் திறமைகளை வெகுவாக மெச்சி மதித்துப் பாராட்டினர்.

இவர்கள் மணிபாகவதர் என்றிருந்த பூர்வாசிரமநிலையிலிருந்த போது இவரின் மேதைப் பண்புகளாற் கவரப்பட்ட மதுரையாதீன முதல்வர், தருமபுர ஆதீன முதல்வர் இருவரும் அவர்களைத் தம்மில் ஒருவராகவே ஏற்றுக் கொண்டு தாமாகவே பரமாசாரிய அபிஷேகமும் மற்றும் தகைமைகளும் நல்கி மேம்பாடு செய்தனர்.

மணிபாகவதராய் தமிழகம் சென்ற அவர்கள் பரமாசாரியசுவாமிகளால் மீண்டு நல்லூரில் பீடாரோஹணம் பெற்ற நிகழ்ச்சி ஈழத்துச் சைவ வரலாற்றிற் பொன்னெழுத்துகளாற் பொறிக்கப்படும் சிறப்புடையது.

இந் நிகழ்ச்சியிலிருந்து ஈழம் தனக்கென்றே தனியாக ஒரு சைவத் தலைமை நிலையத்தைப் பெற்றுக்கொண்டதென்றே சொல்லவேண்டும்.

1960இல் மிகக் கஷ்டமான சூழ்நிலையில் துணிவே துணையாகத் திருவருளை நம்பி அவர்கள் மேற்கொண்ட பெருமுயற்சியால் அவர்கள் காலத்திலேயே ஒரு பதினைந்து வருடங்களுக்குள்ளாகவே ஆதீனமொன்றிற்குரிய சகல அமைப்பு விசேடங்களும் பொருந்த அது விரிவுறறுவிட்டமை நம் நாட்டிற்கோர் வரப்பிரசாதமகும். இயல் இசைத்துறைகளின்விருத்திக்கு ஆதீன அமைப்புக்குள் அவர்கள் நடைமுறைச் சாத்தியமாக ஆக்கிவைத்த ஏற்பாடுகள் பல. இசைக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்ட சம்பவங்களும் பல அவர்களிபால் ஏலவே கொண்டிருந்த நன்மதிப்பின் காரணமாகத் தமிழகமும் மலேஷியாவும் இவ்வாதீன மேன்மைக்கு இன்னமும் உபகரித்துவரும் நிலை போற்றத்தகும்,

ஆதீன சார்பிலும் ஆலயச் சார்பிலும் இன்று நல்லூரில் நிலவும் பக்திக்கலையின் பரிமளிப்பு முற்றிலும் பரமாசாரிய சுவாமிகளை இன்றிய

[5-ம் பக்கம் பார்க்க]

## எங்கள் நல்லூர் முருகன்

ஈழம்வாழ் மக்களுக்கு எங்கள் நல்லூர் முருகா
மகிழ்ந்துநல்ல வாழ்வளிப்பாய் எங்கள் நல்லூர்-
முருகா

அறிவுவடி வானவனே எங்கள் நல்லூர் முருகா
அகிலமெல்லாம் காத்தருள்வான் எங்கள் நல்லூர்
முருகா

சிவனுக்குக் குருவானாய் எங்கள் நல்லூர் முருகா
சிவஞானப் பழமானாய் எங்கள் நல்லூர் முருகா

கண்கண்ட தெய்வமவன் எங்கள் நல்லூர் முருகா
கருணைவடி வானவனே எங்கள் நல்லூர் முருகா

தனக்குவமை இல்லாதான் எங்கள் நல்லூர் முருகா
மனக்கவலை மாற்றிடுவான் எங்கள் நல்லூர் முருகா

கலியுகத் தெய்வமவன் எங்கள் நல்லூர் முருகா
காலமெல்லாம் காத்திடுவான் எங்கள் நல்லூர்
முருகா

முத்திக்கு வித்தானாய் எங்கள் நல்லூர் முருகா
நித்தம்உனை அடிபணிந்தோம் எங்கள் நல்லூர்
முருகா

எங்கள்நல்லூர் முருகா எங்கள் நல்லூர் முருகா
ஏற்றமெல்லாம் தந்திடுவாய் எங்கள் நல்லூர்
முருகா.

கவிஞர் தி. நடராஜா,

## நல்லை வரதன்

நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனத்[து]
எல்லையிலே வீற்றிருக்கும் எம்முருகன்- நல்லகவி
சொலலத் திருவருளைச் சோராது செய்திடுவான்
நல்லைப் பதியானை நம்பு.

★ ★ ★ ★

சிரோங்கத் தெய்வத் திருவருள்சேர் நல்லைதனில்
வாரோங்க வீற்றிருந்து வாழ்கந்தன்- பேரோங்க
வாழ்ந்தவட பாற்றமிழர் மீண்டுமுயர் வாழ்வடையச்
சூழ்ந்தவனின் பாதமலர் சூடு.

★ ★ ★ ★

பழத்திற்காய்ப் பாரை மயிலேறிச் சுற்றிப்
பழநிக்குப் போன பாவகி! -பழநி
ஆண்டவனாய் நின்றவொரு நல்லை வரதனையே
வேண்ட அவனருள்வான் வேண்டு.

கவியரசு வெண்பாமணி முருககுரியன்

[இன்று நல்லூர்க் கந்தன் 16ம் திருவிழா]

## வவனியா பதில் நீதவான்

யாழ்ப்பாணம், திங்கள்

வவனியா மாவட்ட நீதிபதியாகவும், நீதவானுகவும், சட்டத்தரணி என். எம். எஸ். சொர்ணபாலா இன்று முதல் இருவாரங்களுக்கு கடமையாற்றுவார்

வவனியா நிரந்தர மாவட்ட நீதிபதியும், நீதவானுமான ஆர். எம். ஜி ராஜபக்ஸ இளைப்பாறும்முகமாக விடுமுறையில் செல்வதை தொடர்ந்தே இப்பதில் நியமனம் இடம்பெற்றுள்ளது. (க)

## நிவாரணநிதி வழங்கப்பட்டது

நெடுந்தீவு. ஞாயிறு

அண்மையில் கிளிநொச்சியில் வைத்து இராணுவத்தினரால் சுட்டுக் கொலலப்பட்ட இறையியல் மாணவனின் குடுப்பத்திற்கு தென் இந்திய திருமண்டலத்தின் பேராயர் அருட்திரு. டி. ஜே. அம்பலவாணர் தமது பேராயர்நிதியிலிருந்து 3000 ரூபா வழங்கியுள்ளார்.

இந்நிதியை கிளிநொச்சித் திருச்சபையின் குரு அருட்திரு. டி. எஸ். தியாகராசா அண்மையில் நேரில் கையளித்தார்.

அத்துடன் மேலும் ரூபா 6000 சுயஉழைப்பு மூலதனமாக அன்னுரின் மனைவி கிருஷ்ணகுமாரி மைக்கலிடம் கையளிக்கப்பட்டது. (வா)


## கடைசி நேர வரி விளம்பரம்

## தேவை

காலியிலுள்ள சிவன் கோவிலுக்கு குருக்களும், உதவிக் குருக்களும் உடன் தேவை. நேரிலோ, கடித மூலமோ தொடர்பு கொள்ளவும் - சி. சிவசுப்பிரமணியம், 16A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சுலைமான் கண்டுவிற்கு முன்பாக) C 4250

லிடோ

காலை 10-30, 2-30, 4-30, 6-30.

Dragon Lee-Aa Golden Dragon
Johnnie Chan- As Silver Snake
in
GOLDEN DRAGON SILVER SNAKE
(Karate, Action, Thrills and Color)

அடுத்த வெளியீடு
அந்த 7 நாட்கள்

வெலிங்டன்
வெண்திரையில்

10-30, 2-30, 6-30
Su Sanah York-AlanBates
John Hurt
in
The Shout
New Release

உஷா மினி
THUNDER

ஆயுதப் படையினர்க்கு சவால் விடும் தனி ஒரு இளைஞன் நவீன ஆயுதத்துடன் பொலிசாரை, பொலிஸ் வாகனங்களை தகர்க்கும் வீரன்.

புதிய வெளியீடு


## இரத்ததானத்தில் பெண்கள்ஆர்வம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் சனிக்கிழமையன்று இடம்பெற்ற இரத்ததானவைபவத் இளம் பெண்களே ஆர்வத்துடன் அதிகளவில் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்கள்.

யாழ் அரசினர் வைத்திய சாலை இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி டாக்டர் செல்விஎஸ். ஆறுமுகம் தலைமையில் இரத்தவங்கி ஊழியர்கள் நேரடியாக இங்கு வந்து இரத்தத்தை சேகரித்தனர். வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எமில் அத்தநுரியார், கழகச் செயலாளர் திரு. தம்பு தேவராசா ஆகியோர் இதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தனர்.

## சமூகசேவைப் பகுதி முற்பணம் வழங்கும்

நெடுந்தீவு, ஞாயிறு

வறுமை நிவாரண முத்திரைகளுக்கு உணவும்பொருட்களை வழங்கும்பொருட்டு சமூக சேவைகள் திணைக்களம் சகல பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்கும்முற்பணம் வழங்கவுள்ளது

பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் அமைந்துள்ள அவ்வப் பகுதி உதவி அரசாங்க அதிபர் எவ்வளவு தொகை வழங்கப்படுதல் வேண்டுமென்பதை உறுதிசெய்வார்.

வழங்கப்படும் உணவு முத்திரையின் பெறுமதிக்கு அமைவாகவே இம்முற்பணம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. [வா]

## அணைவரும்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் எம். எச் மொஹமட் கேட்டுக்கொண்டுள்ளார். பதுளையில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டியொன்றில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இக்கோரிக்கையை விடுத்தார். [ஊ]

## கிளிநொச்சி---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வழமைபோல் ஆரம்பமாக இருக்கும் பாடசாலைகளாகும்.

கடந்த 2-ம் தவணை நடைபெறுதுபோன பரீட்சைகள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள நேர சூசியின்படி வரும் 3-ம் திகதி முதல் நடைபெறும் என்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான வினுத்தாள் தேவைப்படும் பாடசாலை அதிபர்கள் விபரங்களுடன் வட்டாரக் கல்வி அதிகாரி பரீட்சை செயலாளர் திரு. நா. தணிகாசல பிள்ளையைச் சந்திக்கும்படியும் ஜனுப் மன்சூர் தெரிவித்துள்ளார். [ஆ]

## ஆராதனை இடை நிறுத்தம்

நெடுந்தீவு, ஞாயிறு

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமுக்கு அண்மையில் அமைந்துள்ள இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் புனித பேதுறு வானவரின் தேவாலயத்தில் மாலை வேளைகளில் நடைபெற்று வந்த ஆங்கில ஆராதனை தற்க லிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக சபையின் குரு அருட்திரு கே. பி. கோவிந்தராஜா தெரிவித்துள்ளார்.

தினமும் மாலை வேளைகளில் எதிர்பாராதவிதமாக வரும் "ஷெல்" தாக்குதலே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

## மானிப்பாய் வைத்திய அதிகாரி

பண்டத்தரிப்பு, ஞாயிறு

மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரியாக டாக்டர் வை. சிறிகாந்தா கடந்த வாரம் தொடக்கம் பதவி ஏற்றுள்ளார். கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய இவர் அவுஸ்ரேலியாநாட்டின் புலமைப்பரிசிலைப்பெற்றுஅங்கு ஒருவருடகாலம் தமது மேற்படிப்பை பூர்த்திசெய்துவிட்டு அண்மையில் நாடுதிரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நேற்றைய---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

நெஞ்சில் ஷெல்பட்டு ஸ்தலத்திலேயே பலியானூர்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் ஹற்றன்நாஷனல் வங்கி முகாமையாளரான கோண்டாவிலைச் சேர்ந்த எஸ். சூரியகுமார் [35 வயது] மார்பில் ஷெல்தாக்கிய நிலையில் ஸ்தலத்திலே மரணமானூர்.

எஸ். சூரியகுமார் யாழ். இந்துக் கலலூரிபழைய மாணவரும். அக்கல்லூரியின் முன்னுள் கிரிக்கெட்அணி காப்டனுமாவார். இவர்முன்புவடபகுதியில் பிரபல கிரிக்கெட் சுழல் பந்து வீச்சாளராகவும்விளங்கினூர்.

இத்துடன் இனந்தெரியாத வேரெருநபரும் நேற்றைய ஷெல் பிரயோகத்தின் போது கொல்லப்பட்டார்.

இத்தாக்குதல்களின் போது பொதுமக்களில் 25 பேர்வரை காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் விபரம்: ஜே ரி. பீரிஸ் [45 வயது] புத்தகக் கடையில் நின்றசமயம் காயமடைந்தார், எஸ். பரமசிவம் [49 வயது], நயினதீவு வாசியானஎஸ் சிறிதரன் [27வயது], மொடேர்ண் கிளினிக் உரிமையாளர் எஸ். பாலசுப்பிரமணியம் (32 வயது), எஸ். சிவச்சந்திரராசா [30 வயது], ஜி எச். ரம்ளான் (50 வயது) ரி தயானந்தன் [18 வயது) அரியாலையைச் சேர்ந்த சின்னத்துரை சுரேஸ் [16 வயது] வேலணையைச் சேர்ந்த கெங்காதரன் சந்திரன் [27 வயது] சிவானந்தா கபேயில் வேலை செய்கின்ற ஆர். இராமலிங்கம் [35 வயது] எஸ். சிவகுமார் [24 வயது] ஆண்டியப்பா (வயது 50], கரவெட்டி கே குலவீரசிங்கம் [வயது 33] இராமசாமி சிவகுமார் [10 வயது], முத்தையன்கட்டைச் சேர்ந்த சுப்பையா [56 வயது], நாச்சிமார் கோவிலடி சிவா மகேந்திரன் [வயது 28] வதனராசா [வயது 18 உதயனில் வேலைசெய்பவர்] மற்றும் திரேசம்மா (வயது 38) ஈச்சமோட்டை, பொம்மைவெளி 2-ம் குறுசிகைச் சேர்ந்த நசீர் குல்நூம் [26 வயது] இவர் துப்பாக்கி சன்னம் மார்பில் பட்டு காயமடைந்துள்ளார்.

யாழ் கோட்டையிலிருந்து பிரயோகிக்கப்பட்ட ஷெல்கள் யாழ் ஆஸ்பத்திரி, பஸ் நிலையப் பகுதி, யாழ் கொட்டடி, யாழ் வேம்படி கல்லூரி பகுதிகளிலும் வீழ்ந்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

யாழ் கொட்டடியில் வந்து வீழ்ந்த ஷெல் ஒரு வீட்டின் மதில்களைப் பெயர்த்துள்ளது. அங்கு நின்ற 'நாய், ஒன்றும் துடிதுடித்து இறந்து விட்டது. வேம்படி, நிம்மர் மண்டபம் குறுக்கு வீதிகளிலும் வீடுகள் சேதமடைந்துள்ளன

ஷெல் தாககுதல் ஓய்ந்த பின்னர் இரவு 7 மணிபளவில் கோட்டையை நோக்கிப் பறந்து வந்த ஹெலிகொப்டருக்கு போராளிகள் சுட்டனர். அப்போது ஹெலிகொப்டரிலிருந்தும் திருப்பிச் சுடப்பட்டது.

யாழ் நகரில் மின்சாரமும் சிறிது நேரம் தடைப்பட்டிருந்தது.


நியூ விக்ரேஸ் புதிய வீடியோ பட

இன்றைய வெளியீடு

நாளெல்லாம் பௌர்ணமி

(A print பிரதி)

★ பிரபு ★ ரஞ்சனி
★ செந்தில் ★ இளவரசி

நியூ விக்ரேஸ் எலெற்ரோனிக் கொம்பிளெக்ஸ்,
23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23532

[A-1075]


# நாவற்குழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளிவந்தபொழுது விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில்நேரடிச் சமர் இடம்பெற்றது. இழப்புகளுடன் முகாமுக்குள் திரும்பிய இராணுவத்தினர் மோட்டர் 'ஷெல்'களை ஏவியவண்ணமிருந்தனர். விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்புகளுமில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். கோட்டையில்

யாழ். கோட்டை முகாமின் பொலிஸ் விடுதி காவல் நிலையத்திலிருந்து நேற்று மாலை விடுதலைப்புலிகளின் கோட்டை காவல் அரணை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் 'ஷெல்' தாக்குதலும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டன.

இந்த தற்காப்பு யுத்தத்தில் தமது தரப்பில் இரு போராளிகள் காயமடைந்ததாகவும், இராணுவத்தினர் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல்களைத்தொடர்ந்து முகாமுக்குள் திரும்பிய இராணுவத்தினர் அதிசக்தி வாய்நத 'ஷெல்'களை யாழ். நகர்ப்புறங்களை நோக்கி ஏவிவிட்டனர்.

## தமிழீழ ராணுவம்

இத்தாக்குதல் சம்பவம் குறித்து தமிழீழ ராணுவம் விடுததுள்ள அறிக்கையில், தமது இயக்கப் போராளிகளும் சக இயக்கப் போராளிகளும் கோட்டை முகாமிலிருந்து வெளிவந்த இராணுவத்தினரை எதிர்த்து, அவர்களை மேலும் வெளியேறவிடாது தாக்கியதாகவும், தமது புதிய ரக எச். ஆர் எல் 60 இல. மோட்டர் ஷெல் தாக்குதலில் இரு படையினர் பலியானதுடன் பலர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## ஒவ்வொரு---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கூட்டணியின்இக்கோரிக்கை சம்பந்தமாக அரசாங்கம் கலாநிதி எச் டிபிள்யூ. ஜயவர்த்தனு, திரு. சந்திரா சேனவிரத்னு, திரு. மார்க் பெர்ணுண்டோ, திரு எச். எல். டீ. ல்வா உட்பட பல சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசிப்பதாகவும் தெரிய வருகிறது. [கூ - ஊ]

## மலையகத்தின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காக மலையகத்தில் பாதுகாப்பான "தேயிலைத் தோட்டமொன்றினை தேடிக்கொண்டிருந்ததை ஒப்புக்கொண்டுள்ளனராம். அத்துடன் அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள கெரில்லாப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றதையும் ஒப்புக்கொண்டுள்ளதுடன் அங்கிருந்து மலையகத்திற்கு ஆயுதங்கள் கொண்டுவந்ததையும் ஒப்புக்கொண்டுள்ளதாக அச்செய்தி கூறுகிறது. [கூ-ஊ]

## ரெஸோ---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முயிரை துச்சமென மதித்து எம்மோடு பூரணமாக ஒத்துழைத்த ஆட்டோரிக்ஷா ஓட்டுனர்களுக்கு தமிழீழ மக்கள் சார்பில் நன்றியறிதலை தெரிவிக்கின்றேம் "

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் ஆட்டோரிக்ஷா ஓட்டுனர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (மா)

## மதகின் ஒருபகுதி இடிந்த நிலையில்

வவனியா, ஞாயிறு

கிளிநொச்சியிலிருந்து யாழ் வீதி பக்கமாக வரும் முதலாவது மதகின் ஒருபகுதி இடிந்துளளது. மிகவும் ஆழமான இந்த மதகின் ஊடாகவே ஆபத்தான நிலையல் வாகனங்கள் பிரயாணததினை மேற்கொள்ளுகின்றன

இந்த மதகின் மற்ற பகுதியும் எந்த நேரமும் இடிந்து விழக்கூடிய அபாய நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

வாகனங்கள் செல்லும் வேளையில் இப்பகுதி இடிந்து விழுமாயின் உயிர் ஆபத்து ஏறபடலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

## குழு அறிக்கை சமர்பிக்கும்

கொழும்பு, ஞாயிறு

தற்போது இந்தியா சென்றுள்ள இலங்கை நிதியமைச்சை சேர்ந்த மூன்று உயரதிகாரிகள் [illegible] தனது சிபாரிசுகளை இவ்வாரம் இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாணசபைகளுக்கு நிதி வழங்கல், வரிசேகரித்தலும் பங்கிடுதலும், திட்டமிடல் பணிகளில இந்திய பட்ஜெட் விபரம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது போன்றவற்றை ஆராய இக்குழு கடந்தவாரம் இந்தியா சென்றது தெரிந்ததே.

முன்னுள் அரசாங்க ஊழியரான திரு. வேர்ணன்பீரிஸ், திரைசேரியில் பட்ஜட் இயக்குனர் திரு. எச். குணவர்தனு நிதிக் கொள்கை சம்பந்தமான திணைக்களத்தின் உதவி இயக்குநர் திரு. எம். திஸநாயக்க ஆகியோரே தற்போது புதுடில்லி சென்றுள்ளனர். [கூ-ஊ]

## குப்பிளானில் நிலைகொண்ட சோதி

தாய்தந்தை உலகமென வலமாய் வந்து
தந்தமாங் கனிவாங்கித் தம்பிதண்ணை
நீமுந்தி அருகிருந்து பிம்பிளானில்
நிலைகொண்டு சோதிவடி வாகிநின்றாய்
வாழ்கின்ற தெய்வமென உன்னைப்போற்றி
வாயார நாம்பாடி வாழ்கின்றோம்
ஆள்வந்து மும்மலங்கள்போக்கிநின்று
அருமருந்தே விநாயகரே அருகேவாரும்.

— அன்பர்

குப்பிளான் சொர்க்கவளவு சோதிவிநாயகர் ஆலய அலங்கார உற்சவம் இன்று (25-8-86) திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

# மன்னார் செய்திகள்

### 150 வது ஆண்டு விழா

மன்னார் மாவட்டத்தில் வரலாற்றுப்புகழ் மிக்கதும் பழமை வாய்ந்த ஆலயமுமான புனித காணிக்கை மாதா ஆலயத்தின் 150ம் ஆண்டுஜூபிலி விழா கொண்டாடப்படவுள்ளது. இதன் நிமித்தம் மலர் வெளியீடு விசேட வழிபாடுகள் கலை நிகழ்ச்சிகள் ஆகியன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதன் ஏற்பாடுகளை ஆலய பரிபாலன சபையினரும் பங்குத் தந்தை அருட்திரு சேவியர் குலேஸ் அடிகளாரும் மேற்கொண்டு வருகின்றனர்.

### பயிற்சி வகுப்பு

மன்னார் பனம்பொருள் அபிவிருத்திச் சபையினரால் ஓலைத்தொடுவாயில் பனம் பொருட்களான கைப்பணிப் பொருள்களை உற்பத்தியாக்கும் பயிற்சி வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கென ஓர் பயிற்சி ஆசிரியரும் நியமனம் பெற்றுள்ளார். இதன் இயக்குநராக பனம் பொருள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் திரு மு. நல்லகுமார் கடமையாற்றுகிறார். இதன் செயற் திட்டங்களை மன்னார் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. பி. சண்முகநாதன் கவனித்து வருகிறார்.

### விற்பனை நிலையம்

மன்னாரில் வெகு விரைவில் பனம் பொருள்களைக்கொண்ட விற்பனை நிலையமொன்று முன்னர் லக்சல இருந்த இடத்தில் திறக்கப்படவுள்ளது இதற்கான பூர்வாங்க வேலைகளை பனம்பொருள் அபிவிருத்தி வெளிக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. மு. நல்லகுமார் மேற்கொண்டு வருகிறார்.

### நிவாரணம்

அண்மையில் பேசாலை கரிசல் கடலில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் மரணமான காயப்பட்ட குடும்பங்களுக்கு சிறுவர் பராமரிப்பு பாதுகாப்பு நிலையத்தினரால் இரண்டாவது தடவையாகவும் அரிசி மா சீனி போன்ற முக்கிய உணவுப் பொருள்கள் கடந்த 15ம் திகதி வழங்கப்பட்டது அரசாங்க அதிபர் திரு எம். எம். மக்பூல் ஏற்பாட்டின்படி இப்பணியை மன்னார் தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. சு. அருந்தவச்செல்வம் நடைமுறைப்படுத்துகின்றார். பேசாலை கிராமசேவை அலுவலர் ஓலைத்தொடுவாய் கிராமசேவை அலுவலர்கள் இதன் விநியோகத்தை கவனிக்கின்றனர்.

### கடற்றொழிலாளர் நிவாரணம்

மன்னார் மாவட்டத்தில் கடல்வலயச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 1500 குடும்பங்கட்கு கடற்றொழிலாளர் உணவு முத்திரைகளும் கடற்றொழிலாளர் கடன் அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஐந்து அங்கத்தவர்களை உள்ளடக்கிய குடும்பங்கள் மாதாந்தம் 200 ரூபாவும் ஆறு அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு மாதாந்தம் 250 ரூபாவும் மானியமாகப் பெறுகின்றார்கள்

மேலும் இச்சலுகைகிடைக்காத ஏனைய கடற்றொழிலாளர்களின் நலன்கருதி இரண்டாவது பட்டியல் ஒன்றை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம். எம். மக்பூல் சம்பந்தப்பட்ட அதிகாரிட்கு அனுப்பியுள்ளார். விரைவில் இவர்களுக்கும் நிவாரணம் கிடைக்கலாம் என நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [இ]

## வவனியா மாவட்டத்தில் தமிழ், சிங்கள கொத்தணி பாடசாலைகள் அமைப்பு

வவனியா, ஞாயிறு.

வவனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் மூன்று தமிழ் கொத்தணி அமைப்புகளும் ஒரு சிங்கள கொத்தணியும் அமைக்கப்பட்டுள்ளது. இக்கொத்தணி பாடசாலை அடுத்த மாதம் முதல் அமுல் செய்யப்படும்.

வவனியா நகரம். பூவரசன் குளம், கனகராயன்குளம், மடுக்கந்த ஆகிய பாடசாலைகளே கொத்தணி அமைப்பின் கீழ் தெரிவாகியுள்ளன கொத்தணி பாடசாலை அதிபர்கள் வட்டார கல்வி அதிகாரிகளின் அதிகாரம் உள்ளவர்களாக இருப்பார்கள்

கொத்தணி முறையும் துரித மேற்பார்வையும், வளங்களை கொத்தணி பாடசாலைகளில் பயன்படுத்தலும் கூடிய முறையில் கொத்தணி பாடசாலை கூட்டு அபிவிருத்தி சங்கங்களை அமைத்தல் ஆகிய மூன்றும் கொத்தணி பாடசாலைகளின் வளர்ச்சி மேம்பாட்டுக்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கொத்தணிஅமைப்புவெற்றிகரமாக செயல்படுவதற்கு பொதுமக்கள் பிரஜைகள் குழு. நலன்விரும்பிகளுடைய ஒத்துழைப்பினை கல்விப்பணிப்பாளர் திரு. வி. சபாநாயகம் கோரியுள்ளார். இதன் நலன் கவனிப்பு இணைப்பதிகாரியாக கல்வி அதிகாரி திரு. பி. வீரபத்திரன் நியமிக்கடபட்டுள்ளார். [வா]

## திருமலை அபிவிருத்திக்கு நிதிஒதுக்கீடு

திருகோணமலை, ஞாயிறு

திருகோணமலை நகர அபிவிருத்திக்கு சுமார் ஆறு லட்சத்து 90 ஆயிரம் ரூபா உள்ளுராட்சி ஆணையாளரால் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியிலிருந்து அப்பகுதிகளுக்கான வீதித்திருத்த வேலைகள், சுகாதார சீர்திருத்தம் மற்றும் புதிய மின் இணைப்பு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

## கிளிநொச்சியில் விசர்நாய் தொல்லை

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சியில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து பொதுமக்கள் வெளியேறிய பகுதிகளில் பசி பட்டினிக்காளான வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் ஏற்பட்டுள்ளது.

இந்தப்பகுதிக்கு விவசாய நிமிததம் சென்ற குடும்பத்தர் ஒருவர் விசர்நாய் கடிக்காளாகி மரணமடைந்துள்ளார் மேலும் சிலர் விசர்நாய்களின் கடிக்கு ஆளாகி சிகிச்சை பெற்றுவருவருகின்றனர்.

கிளிநொச்கியில் இவ்வாறான நாயொன்றின் கடிக்காளானவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு நாயைப்போல்குரைத்து நாயைப்போல் நடந்து மரணமானார். [வா]

## கிராமமக்கள் அனைவர்க்கும் அதிர்ச்சி



மண்டைதீவைச் சேர்ந்த அமரர் மாசிலாமணி கருணாகரனின் (வயது24) திடீர்மறைவு அவரது பெற்றோர்கள் உறவினர்கள் ஆகியோர்களுக்கு மட்டுமல்ல இக்கிராமமக்களுக்கே பெரும்அதிர்ச்சியையும் வேதனையையும் கொடுத்துள்ளது.

இவர் சிறுவயதிலிருந்து மிகுந்த கடவுள பக்தி உடையவராக விளங்கியவர். பாடசாலை வாழ்க்கையில் சிறந்த மாணவனாக விளங்கியதோடு சிறந்த ஒழுக்கசீலராகவும் காணப்பட்டவர் இவரது திறமைகளை கண்ட பாடசாலை ஆசிரியர்கள் வியந்து பாராட்டுத் தெரிவித்துள்ளார்கள்.

மண்டைதீவு தனியார் மினி பஸ் சேவையில் நடத்துநர் ஆகவும் பின்பு நேரக்கட டுப்பாட்டாளராகவும் கடமையாற்றி இப்பகுதி பிரயாணிகளிடம் நன்மதிப்பையும் அன்பையும் பெற்றுவந்தவர். இயல்பாகவே எவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் இவர் இக்கிராமத்தில நடைபெறும் பொது நிகழ்ச்சிகளிலும் தனது பங்கைசெலுத்த தவறுவதில்லை இதத கையகுண அம்சங்கள் நிரம்பப் பெற்ற இவரை காலன் இளம் வயதிலேயே கவர்ந்து சென்றுவிடுவான் என்று எவரும்கனவு கூட கண்டதில்லை.

"கலைப்பித்தன்"
மண்டைதீவு

## லொறியில் சென்றவர்கள் கடவத்தையில் தாக்கப்பட்டனர்

ஒட்டுசுட்டான் ஞாயிறு

முத்துஐயன்கட்டில் இருந்து வெங்காயம் ஏற்றிக்கொண்டு கொழும்பு சென்ற லொறிச் சாரதி, கிளினர் விவசாயி இருவர் கடவத்தையில் சீருடை அணிந்தவர்களால் தாக்கப்பட்டனர். இச் சம்பத்தின் போது லொறி உரிமையாளரிடமிருந்து மூவாயிரம் ரூபா காணாமல் போய்விட்டதாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது அச்சுவேலியைச்சேர்ந்த லொறி உரிமையாளர் ஒருவருக்கே இந் நிலைஏற்பட்டது. [இ]

## உணவுமுத்திரை விநியோகம்

வசாவிளான், ஞாயிறு

வலிதெற்கு உடுவில் உதவ அரசாங்க அதிபர் பிரிவில் சுமார் 35000 பேர் வறுமை நிவாரணத் திட்டத்தின் கீழ் உணவு முத்திரைகளைப் பெற உள்ளனர்.

இப்பகுதிக்கான உணவு முத்திரை விநியோகம் பெரும்பாலும் அடுத்தவார இறுதிக்கிடையில் பூர்த்தியாக்கப்படும் என இப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுபற்றித் தகவல் தெரிவிக்கையில் 300 ரூபா விற்குட்பட்ட மாதாந்த வருமானத்தினைப்பெறும் சகலகுடும்பங்களும் முன்னைய விநியோகத்தின் போது பெற்றுகொண்ட அளவு உணவு முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவரெனவும் இந்த உணவு முத்திரை விநியோகத்தின்போது உணவுமுத்திரை பெறுவதற்காக விண்ணப்பிக்கத் தவறியவர்களிற்கு மீண்டும் ஒருசந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார் (வா-இ)

## சரித்திரம் கூறும் நூல்நிலையம்

"தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் எந்தத் துன்பத்தையும் இன்பத்துடன் மௌனமாகச் சந்தித்து சுடர்விட்ட தியாக தீபங்கள். இன்னுயிர் தந்த வீரவேங்கைகள். நிச்சயமாக தமிழீழத்தின் வணக்கத்துக்குரிய ஆலயங்கள் நீங்களே" என சுவரில் எழுதப்பட்ட பெரிய வாசகங்கள் 'உறுதியின் உறைவிடம்' ஞாபகார்த்த நூல்நிலையம் செல்லும் எவரையும் ஒருமுறை சிந்திக்கத் தூண்டவே செய்கிறது.

என்ன நடக்கிறது? என்ன நடந்தது? நமது சரித்திரப் பின்னணி என்ன? நாம் எதனை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றோம்? என்ற அரிய பல தகவல்களை இந்த ஞாபகார்த்த நூல்நிலையத்தில் காணமுடிகின்றது. மானிப்பாயில் சமீபத்தில் திறக்கப்பட்டுள்ள 'உறுதியின் உறைவிடம்' என்ற ஞாபகார்த்த நூல்நிலையத்தில் இரத்தத்தை உறையவைக்கும் புகைப்படங்களும் மக்களுக்காக தம்மையே தியாகம்செய்த தியாக புருஷர்களின் உருவப்படங்களும் உள்ளத்தில் நிலைத்துநிற்கக்கூடிய வாசகங்களடங்கிய படங்களும் ஆங்காங்கே காணக்கூடியதாக இருக்கின்றன.

தியாகிகளின் ஞாபகார்த்தமாக அணையாத விளக்கொன்று அறையொன்றினுள் சுடர்விட்டு எரிந்துகொண்டிருக்கின்றது. நல்ல அமைதி. அமைதியுடன் படிப்பதற்கு, படித்து நமது நிலையைத் தெளிவுபடுத்திக்கொள்வதற்கு மேசைகளிலெல்லாம் தாராளமாக சஞ்சிகைகள், பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள், இவை நிறை துகிடககின்றன.

முன்னைய வரலாறும் எதிர்கால வழியும் கூறும் சிறந்த நூல்களும் அலுமாரியில் கிடக்கின்றன ஆவல்கொண்டு ஆழமாகப் படிப்பவர்களுக்கு அந்த நூல்நிலையத்தினர் நல்ல சந்தர்பபத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். வரலாறுகள் திரித்துக் கூறப்படும் இன்றைய காலகட்டத்தில் உண்மையை அறிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு இந்தநூல் நிலையம் மிகவும் பயனுள்ளதாகவே அமையும். "இது அழுவதற்காக அமைக்கப்பட்ட சமாதியல்ல. உறுதியின் உறைவிடம் இது" என்ற வாசகங்களடங்கிய சுவரொட்டியொன்றையும் இங்கு காணமுடிந்தது.

நூல் நிலையத்தை அமைத்து செயல்படுத்திக்கொண்டிருப்பவர்கள் நல்ல திட்டத்துடனேயே இயங்கிக்கொண்டிருப்பது இந்த நூல் நிலையத்தை ஒருமுறை பார்த்து வருபவர்களுக்குப் புரியக்கூடியதாகவே இருக்கும்.

— கணேஷ்

## வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

மல்லிகை 22வது ஆண்டு மலர் வெளியீட்டுவிழா 27ம் திகதி புதன்கிழமை பிற்பகல் யாழ். மின்சார நிலையவீதியில் உள்ளபூபாலசிங்கம் ஸ்ரோர்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வரதர் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் திரு. க சட்டநாதன், திரு. எஸ். வன்னியகுலம், திரு வ. இராசையா, திரு. இ ஜெயராஜ் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

(வா)

## மாணவிக்கு பாராட்டு

ஒட்டுசுட்டான், ஞாயிறு.

கற்சிலைமடு அ. த. க பாடசாலையில் இருந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதல் மாணவி செல்வி துரைராசா ஜெயநிலாவாகும்.

இவருக்குப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களால் பாராட்டு வைபவமும் இடம் பெற்றது. [இ]

## பிரயாணிகள் கஷ்டம்

சாவகச்சேரி, ஞாயிறு.

மட்டுவில்- பருத்தித்துறை வீதி சீர்கெட்டு இருப்பதினால் இவ் வீதியால் செல்கின்ற வாகனங்களும் -பாதசாரிகளும் பெரும் கஷ்டங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இவ் வீதியை உடன் திருத்த நடவடிக்கை மேற் கொள்ளுமாறு மட்டுவில்- நுணுவில் பொது அமைப்புக்கள் பெருந்தெருக்கள் திணைக்களத்தினைக் கோர நடவடிக்கை எடுத்து வருகின்றன. [இ]

## ஈழம் வாழ ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மையாததொன்று அவர்கள் மறைவின்பின் தற்போதைய பரமாசாரிய சுவாமிகளின் அருளாட்சியில் ஆதீனம் வரும் மேலதிக விருத்திகள் ஒவ்வொன்றும் அவர்கள் நிஷ்டை ரூபியாய் நின்று நிகழ்த்தும் புதுமைகளாகவே கருதப்படவேண்டியனவாகும்.

# பாக். அரசை எதிர்ப்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை!

## ஸியாவுல்ஹக் எச்சரிக்கை

இஸ்லாமாபாத், ஆக. 24 பாகிஸ்தானில் எட்டுமாதகால சிவிலியன் அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுக்கு எதிராக கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கப்போவதாக ஜனாதிபதி ஸியாவுல் ஹக் அறிவித்துள்ளார்.

சவூதிஅரேபியா பத்திரிகையொன்றிற்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

செல்வி பெனஸிர் பூட்டோ நாட்டின் சட் திட்டங்களை கடைப்பிடிப்பதற்கு மாறாக அவசரமாக அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்புகிறார் என்றும் தெரிவித்த திரு ஸியாவுல் ஹக் பெனஸிர் பூட்டோ அதிகாரத்திற்கு வரவிரும்பினால் அமைதியாக இருந்து 1990ம் ஆண்டு நடத்தப்படும் பொதுத் தேர்தலில் போட்டியிடவேண்டும் என்றும் கூறினர்.

தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள செல்வி பூட்டேவிற்கு எதிராக வழக்கு தொடரப்படுமா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த திரு ஸியாவுல் ஹக், "எந்தநாட்டிலும் சட்டவரோதமாகக் குற்றமிழைப்பவர்களுக்கு அவர்களது தராதரங்களைப்பொருட்படுத்தாதவகையில் தண்டனை வழங்கப்பட வேண்டும்" என்று கூறினர்.

இது இவ்வாறிருக்க எதிர்தரப்புஆதரவாளர்கள் ரெயில் தபால் அலுவலகம் உட்பட இரு அரசாங்க கட்டிடங்களை தீமூட்டி எரித்துள்ளதாகவும் இதனால் பாகிஸ்தானின் தெற்குப் பகுதியில் பலத்த மோதல்கள் நடைபெற்றதாகத்தெரிய வருகிறது. (ஒ)

## உத்தரப்பிரதேஷில் 149 பேர் பலி

(புதுடில்லி)

உத்தரபிரதேஷில் மழையாலும் வெள்ளத்தாலும் இறந்தோரின் எண்ணிக்கை நேற்றுவரை 149ஆக உயர்ந்துள்ளது.

நேற்று வீடொன்று இடிந்து விழுந்ததினால் இரண்டுபேர் இறந்துள்ளனர். (ஒ)

## "ஈழத்திலக்கியத்தில் விமர்சனம் இன்னும் வளரவேண்டிய துறையே!"

### கருத்தரங்கில் பேராசிரியர் நந்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தசாப்தத்திற்கு முன் புனைகதைகள் படைக்கப்பட்டு வந்த போக்கின் புலனில் சாந்தனின் கதைகளை நோக்கும் போது அவரது தனித்துவமும் பங்களிப்பின் முக்கியத்துவமும் புலனாகும்."

இவ்வாறு கலாநிதி நா. சுப்பிரமணியஐயர், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ் கிளை ஏற்பாடு செய்த நோன்மதிக் கருத்தரங்கில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

'புதிய பிரச்னைகளும் சாந்தனது புனை கதைகளும்' என்ற தலைப்பிலமைந்த இக் கருத்தரங்கிற்கு பேராசிரியர் நந்தி தலைமை தாங்கினர். யாழ். நகரிலுள்ள இலங்கை ஆசிரியர் சங்க மண்டபத்தில் கடந்த செவ்வாய் பகல் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

கலாநிதி சுப்பிரமணிய ஐயர் தொடர்ந்துபேசும்போதுதமது நிலைப்பாட்டின் நியாயத்தை உணர்த்துவதற்கு அக்கால கட்டத்தில் சாந்தன் மிகவும் சிரப்பட நேர்ந்தது. புதிய பிரச்னைகளைப் பிரதிபலித்த முன்னேடி அவர் என்றார்.

பேராசிரியர் நந்தி தமது தலைமையுரையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மாதாந்தக் கருத்தரங்கு வரிசையிலே இந்நிகழ்ச்சி விமர்சன அரங்காகவே அமைகிறது ஈழத்திலக்கியத்தில் விமர்சனம் இன்னும் வளரவேண்டிய ஒரு துறையாகவே உள்ளது என்றார்.

திரு. இரா. சிவச்சந்திரன் பேசும் போது, தனித்துவம் வாய்ந்த ஒரு சிறுகதை வடிவினைத் தொடர்ந்து வெற்றிகரமாகக் கையாண்டு வருவதால் ஈழத்திலக்கியத்தில் மட்டுமன்றி பரந்த தமிழிலக்கிய உலகிலே கூட சாந்தனுக்கென்றொரு தனியிடம் உண்டு எனக் குறிப்பிட்டார்.

திரு பி சிவநாதன் தமதுரையில் மொழிப் பிரச்னையாகத் தோன்றிய சிக்கல் இனப் பிரச்னையாக மாறி இன்று எரியும் பிரச்னையாக மாறியுள்ள வரலாற்றை இக் கதைகளைத் தொகுத்து நோக்கும் ஒருவர் உணரலாம் என்று கூறினர்.

எழுத்தாளர் சங்கச் செயலாளர் கலாநிதி சபா. ஜெயராசா நன்றியுரையாற்றுகையில் தமிழிலக்கியத்தை எதிர்நோக்கிய புதிய சவால்களுக்கு முகங்கொடுத்து தொடர்ச்சியான ஆக்கங்களைப் பல காலமாகப் படைத்து வந்தமையினால் சாந்தனின் கதைகளை இவ்வாறான ஒரு ஆய்வுக்குட்டடுத்த முற்போக்கு எழுத்தாளர் சங்கம கருதியது எனவும் சாந்தனின் பார்வை குறுகியதல்ல, உலகளாவிய மனித நேயக் கொள்கைகளால் நெறிப்படுத்தப்பட்ட வீச்சைக் கொண்டது எனவும் குறிப்பிட்டார். [ஆ]

## "விளையாட்டு நிகழ்ச்சிகள் மனித வாழ்வை வளம்படுத்த உதவும்"

யாழ்ப்பாணம், திங்கள்

"உடல் ஆரோக்கியமும், மனஉறுதியும் எம்மிடையே வளரவேண்டுமானல் நாங்கள் ஒவ்வொருவரும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றவேண்டும்" என்று கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 31-வது ஆண்டு விழாவையொட்டி நடத்தப்பட்ட இல்ல மெய்வல்லுனர் போட்டியை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய நிலையத் தலைவர் திரு. வே. கதிரேசன் கூறினர்:

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: "விளையாட்டுக்கள் மனிதவாழ்வை வளம்படுத்த உதவுவதுடன் ஒற்றுமை உணர்வையும் ஏற்படுத்த வழிசெய்யும்".

பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய மூன்று இல்லங்களிடையே நடைபெற்ற போட்டிகளில் மஞ்சள் இல்லம் முதலாமிடத்தைப் பெற்று நிலைய வெற்றிக்கேடயத்தை பெற்றுக்கொண்டது. (ஒ)

## இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 9 [1986-8-25]
கிழமை: திங்கள்
திதி: ஷஷ்டி பி.இ வரை
நட்சத்திரம்: அச்சுவினி மு ப வரை

மேடம்: ஆசை அலைகளினால் அவப்பெயருக்கு இடமுண்டு. உள் வீட்டிலேயே பூசல்கள் உருவாகும். தொழிலும் சீர் கெடும். அமைதி நன்று.

இடபம்: முத்தான சந்திப்பு ஒன்று நிகழும். காதலர்கள் வாழ்க்கை கலகலப்படையும். தொழில் சிறப்பும் உண்டு. சுமாரான தினம்.

மிதுனம்: நண்பர்களும் காலை வாரிவிடக் கூடும் அவசரப் போக்கைத் தவிர்க்கவும். உடல்நலமும் பாதிக்கப்படலாம். சுகாதாரம் நன்று.

கடகம்: தாய்வழியால் தனவரவுக்கு இடமுண்டு தன் தொழில் சிறப்புமுண்டு. சிலர் முதலீடு செய்வதற்கும் ஆலோசிப்பர் சிறப்பான தினம்.

சிங்கம்: திறமைக்கு முதலிடம் கிடைக்கும். சொகுசான வாழ்வும் கிட்டும். இதயச் சுமை இன்றாகலும் பொன்னுள்.

கன்னி: ஆணவப் போக்கு மற்றவர்களின் வெறுப்பைத் தேடித் தரும். ஏமாற்றத்திற்குமிடமுண்டு. தொழிலிலும் நஷ்டத்திற்குமிடமுண்டு.

துலாம்: உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள். கலைஞர்கள் போற்றப்படுவார்கள். குடும்பத்திலும் குதூகல சம்பவங்கள் இடம்பெறலாம். நன்னுள்.

விருச்சிகம்: இதயம் எரிமலையாகக் குமுறும். சிலர் வீண் பழிக்கும் ஆளாகுவார்கள் எவ்விடயத்தையும் நிதானத்துடன் செயல் படுத்தவும்.

தனுசு: பிதா வழிப் பெருமையுண்டு பந்தபாசம் உங்களைப் பரவசபபடுத்தும் புதிய தொடர்பு நன் மாற்றங்களை ஏற்படுத்தும்.

மகரம்: இலட்சிய நோக்குடன் வீறுநடை போடுவீர்கள். உறவு முறைகளால் மகிழ்ச்சியடைவீர்கள். குடும்பத்திலும் தென்றல் வீசும்.

(7-ம் பக்கம் பார்க்க)

## யாழ். அபிவிருத்திச்சபை அறிவித்தல்

1986ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 15ஆம் திகதி காலை 10-00 மணிவரை யாழ். அபிவிருத்திச்சபை பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப்பகுதி) அவர்களால் கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு, பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டிடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அரசாங்கத திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்களில் கீழ்க் காட்டப்பட்ட வேலைகளின் எதிரே காட்டப்பட்ட தொகைக்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10-10 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் வைப்புப் பணத்தையும் கிரயப் பணத்தையும் சம்பந்தப்பட்ட யாழ். அபிவிருத்திச் சபை உப அலுவலகத்தில் செலுத்துவதன் பெயரில் 1986ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 08ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

| யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகங்கள் | வேலையின் பெயர் | ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்ட தொகை (தகைமை) | வைப்புப் பணம் | கிரயப் பணம் |
|---|---|---|---|---|
| 1. நெடுந்தீவு | நூல்நிலையக்கட்டிடம் | 40,000/- | 50/- | 25/- |
| 2. தெல்லிப்பழை | பஸ்நிலையம் அமைத்தல் | 40,000/- | 50/- | 25/- |
| 3. மல்லாகம் | உப அலுவலகக்கட்டிடம் | 100,000/- | 100/- | 50/- |
| 4. மானிப்பாய் கிராமம்) | கல்லாவலை சங்குப்புலாவை மதகு அமைத்தல் | 30,000/- | 50/- | 25/- |
| 5, கோப்பாய் | உப அலுவலகக் கட்டிடம் | 110,000/- | 100/- | 50/- |
| 6. அச்சுவேலி | சந்தைக் கட்டிடம் | 400,000/- | 250/- | 125/- |
| 7. மானிப்பாய் பட்டணம் | மத்திய சந்தைக்கட்டிடம் | 150,000/- | 125/- | 75/- |
| 8. நாரந்தனை | கண்ணகை அம்மன்கோவிலடி இறங்குதுறை | 150 000/- | 125/- | 75/- |
| 9. நல்லூர் | உப அலுவலகம் 2ஆம் கட்டம் | 75,000/- | 100/- | 50/- |
| 10. கட்டைவேலி | நூல்நிலையம் 1ம் கட்டம் | 120,000/- | 100/- | 50/- |

அன்ரன் அல்பிரட்
பிரதிச் செயலாளர் (நிர். ச. வேலை)
யாழ். அபிவிருத்திச் சபை,

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
1986-08-22.

(A 1176)


## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க்
(இடைநிறுத்தப்பட்ட எமது டென்மார்க் பயணம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது)
கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்
(வாரத்தில் இருமுறைப் பயணம்)

லிபியா – (Labourers)
சவூதி – கிளீனேர்ஸ்
குவைத் – கிளீனேர்ஸ்
ஈராக் – ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள்
அத்துடன்
பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங்
ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

யூனிவேர்சல்
ஏஜென்சி
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[ ஆயுர்வேதக்கல்லூரிக்கு அருகாமையில் பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ]

(A 1044)

## பட்டதாரிகள் கவனிக்கவும்

வேலையற்ற பட்டதாரிகள் பட்டதாரி ஆசிரிய நியமனம் பெற உங்கள் விபரங்களை அனுப்பவும்.

V. A. சிவராசா, B. A., B. Phil.
தலைவர் / வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்.
வேலணை கிழக்கு,
வேலணை. [C-4213]



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ ஹொலண்ட்
★ பெல்ஜியம் ★ டென்மார்க்
★ சுவீடன் ★ ஸ்பெயின்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.
உடன் தொடர்புகொள்ளவும்.

INTERSUN GROUP,
சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரி அருகாமை)
மானிப்பாய். [A-1029]



## ஆங்கிலம் கற்பவர்களுக்கு

ஆசிரியர் உதவியின்றி தாமாகவே விரும்பிய வாக்கியங்களை அமைக்க பேச, எழுத உதவும் வழிகாட்டி

இதுவரை எவராலும் எழுதப்படாத முறையில் எளிதாக விளங்கக்கூடிய முறையில் பகுதி, பகுதியாக எழுதப்பட்டுள்ளது.

1980 — 1985 வரை க. பொ. த. பரீட்சை வினாவிடை தமிழ் கருத்துக்களுடன் அடுத்த மாதம் வெளிவரவுள்ளது.

ஆக்கியோன்:-
M. K. தில்லைமோகன்
நல்லை பூபாலசிங்கம் புத்தகசாலையில் விற்பனையாகிறது.
தொலைபேசி இலக்கம்: 23620
சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
(C-4239)



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மன் ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம் மேற்கொள்ள அரிய வாய்ப்பு செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

எதிர்வரும் 15-ம் திகதி அழைத்துச் செல்ல இருப்பதால் 15-ம் திகதிக்கு முன் பதிவுசெய்து கொள்ளவும்.

குவைத், அபுதாபி, சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு வருமானம் பெற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
பாஸ்போட் பொண்ட், டிக்கட் என்பன செய்து கொடுக்கப்படும்

GROUP ATLANTIC
(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, Jaffna.
(A 1065)


## வரப்பெற்றோம்

ஐம்பது ஆண்டுகளுக்குமேலாக மாதந்தோறும் வெளி வந்து கொண்டிருக்கும் சிவதொண்டன் சஞ்சிகையை ஆகஸ்ட் மாத இதழ் வரப்பெற்றோம். சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிய திருக்கழுக் குன்றப்பதிகம் நற்சிந்தனை என்பவற்றுடன் திருமந்திரத் தொடர் கட்டுரை ஆலய உற்சவங்கள் சுந்தரர் வாழைக்கனியும் கூழைக் குரங்கும் முத்திநல்குமே துன்பத்தை வெல் குண்டலி திருக்கோவையார் மெய்ப்பொருள் என்னும் கட்டுரைகள் இவ்விதழின் பயனை அதிகரிக்கச்செய்துள்ளன,

யோகசுவாமிகளின் ஆசியுடன் வெளிவரும் இச் சஞ்சிகையைப் பெற்றுப் பயனடைவதுடன் இதன் வளர்ச்சி பிரபல்யம் என்பவற்றுக்கும் உதவ வேண்டியது யாழ் சைவமக்கள் கடனாகும்

அபிராமி அந்தாதி ஆய்வுரைத் தொடர் வெளியீட்டில் 19ம் 20ம் பாடல்கள் ஆய்வுரைகளை ஒரு சிறு நூலாக வழக்கம்பரை சனசமூக நிலைய பஜனைச் சபையினர் வெளியிட்டுள்ளனர். காலத்துக்கேற்றவகையில் உடனடிப் பயன்களை உண்டுபண்ணும் இச் சபையினரின் இவ் வெளியீடு அம்பிகை அடியார்களுக்கும் அபிராமி அந்தாதி பாராயண நூலாகக் கொண்டு துதிப்பவர்களுக்கும் அரியவாய்ப்பாகும். ஆய்வுரை ஆசிரியர் திரு. சந்தானராமனின் இவ்வுரைகள் முன்னர் வெளிவந்த பாடலுரைகளுக்கிணையான இனிய அரியபல கருத்துக்களைக் கொண்டிருப்பதால் இந்நூலைப்படிக்கும் அனைவருக்கும் மனச்திருப்தியை அடைவர். [ப]

### இன்றைய பலன்
(6ம் பக்கத்தொடர்ச்சி)

கும்பம்: உத்தியோக உயர்வுக்கும் வழிகோலப் படலாம். வரவில் திருப்தி காணப்படும், குடும்பத்திலும் குதூகலம் உண்டு.

மீனம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். வீண் செலவுகளும் உண்டு உறங்கிக்கிடந்த பகை மீண்டும் தலை தூக்கும். அவதானம் நன்று.

திருமலை
வே. ரவீந்திரன்


## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்
சின்னையா தர்மலிங்கம்
(S. S. T)
(முன்னாள் பிரபல காலி வர்த்தகர்)
மண்ணுலகம்: 15-10-1927
விண்ணுலகம்: 15-09-1984
திதி: 25-08-1986

மலரில் மணமாய் சேர்ந்திருந்தீர் கனியில் சுவையாய் கலந்திருந்தீர் எங்கள் துணையாய் வாழ்ந்திருந்தீர் மலரின்று மறைந்ததேனோ? மணமே! கனியினின்று கரைந்ததேனோ? சுவையே! எம்மினின்று பிரிந்ததேனோ? துணையே! உங்கள் பிரிவால் வாடும் மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.

"பிருந்தாவனம்" புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்மேற்கு, கோண்டாவில். (C4242)



### புனித இயக்கங்களுக்கு பணிவான வேண்டுகோள்

எனது மோட்டார் சயிக்கிளை ஹொண்டா C-70 88 ஸ்ரீ 8101 நீலநிறம் 11-08-86 அன்று இரவு எனது வீட்டில் இனந்தெரியாத நபர்கள் குறிப்பிட்ட இயக்கத்தின் பெயரைச்சொல்லி ஒருமணித்தியாலத்தில் திருப்பித்தருவதாக எடுத்துச்சென்றனர் ஆனால்இன்று வரை அவர்கள் திருப்பி ஒப்படைக்கவில்லை தயைகூர்ந்து எனது மோட்டார் சயிக்கிளை புனித இயக்கங்கள் இதில் தலையிட்டு மீட்டுத்தருப்படி அன்பாக வேண்டுகின்றேன்.

S தெட்சணாமூர்த்தி,
(ஆசிரியர்)
மாரியம்மன் லேன்,
திருநெல்வேலி தெற்கு. [C-4241]



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ டென்மார்க்
★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

★ கனடா, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமதுமுகவர் உங்களை எதுவித இடையூறுகளுமின்றி நேரடியாக அழைத்துச் செல்வார்.

★ சவூதிஅரேபியாவுக்கு மேசன், தச்சு, வீதித்திருத்தம், விவசாயம், தொழிலாளர் போன்ற பதவிகளுக்கு உடன் அனுப்பி வைக்கப்படும். செல்ல விரும்புவோர் 6 படம், பாஸ்போட் என்பவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொண்ட் ஆகியனவும் செய்துதரப்படும்.

★ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி எமது கிளை ஸ்தாபனம் ஒமேகா ரவல்ஸ் அன்ட் டூர்ஸ் என்னும் பெயரில் வேலணை வங்களாவடி சந்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொடர்பு:
N. BALA,

| | |
|---|---|
| பஸ்வழி இலக்கம்: | திருச்செல்வம் வீதி, |
| 764, பலாலி வீதி, | கோண்டாவில் கிழக்கு, |
| கோண்டாவில். | கோண்டாவில். |

ஒமேகா ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
வங்களாவடிச் சந்தி, வேலணை.
(A 1074)



## St. John's College, Jaffna and Chundukuli Girls' College, Jaffna.

### ADMISSION - 1987.

(1) Vacancies exist, ONLY in the following Classes:
  (a) Year One and Year Sevan (St. John's and Chundukuli Girls' College.
  (b) Year Ten (Only St. John's College).

(2) Children born between 01-02-1981 and 31-01-1982 only will be considered for admission to Year One. Birth Certificate should be annexed along with the Application Form.

(3) Pupils to be considered for admission to Year Seven should be below the age of twelve on 31-01-1987.

(4) Pupils to be considered for admissoin to Year Ten should be below the age of fifteen on 31-01-1987.

(5) Apply before the 13th of Septemper, 1986 on forms available from the respective Schools from the 3rd of September, 1986. Application made on any other forms will not be considered.

(6) Please send stamped, self-addressed long envelope and Postal Order drawn in favour of the "Principal" of the respective Schools for Rs 20/- per Application Form for Year Sevan and Year Ten, and Rs. 10/- for Year One.

(7) Admission Test (for Year Seven and Year Ten) will be held at 8 30 a.m. on Saturday the 11th October, 1986.

PRINCIPALS.

A 1152

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 25-8-86

புதிய யோசனைகள்

# "'தமிழ் ஈழம்' அமைவதற்கு அத்திவாரமாக அமைகின்றன!"

## — தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, ஞாயிறு

"இலங்கை அரசின் உத்தேச மாகாண சபைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சில அதிகாரங்கள் 'தமிழ் ஈழம்' பெறுவதற்கான அத்திவாரமாக அமைகின்றன. அத்துடன் மாகாண பொலிஸ் படைக்கு வழங்கப்படும் அதிகாரங்களும் சுயாட்சி முறை ஒன்றுக்கே வழிவகுக்கும்."

இவ்வாறு, மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவரும் மகரகம உறுப்பினருமான திரு தினேஷ் குணவர்த்தன, கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்களித்த பேட்டியில் கூறியுள்ளார்.

அவர் மேலும் தமது பேட்டியில் கூறியதாவது: 'தற்போதைய பேச்சுவார்த்தைகளின் விளைவாக சம்பந்தப்பட்டோரிடையே உடன்பாடொன்றுஏற்கனவே கைச்சாத்திடப்பட்டு விட்டதோ என்பதேநாட்டு மக்களின் சந்தேகமாகவுள்ளது"

இப்போது பொதுத்தேர்தலொன்று நடத்தப்பட்டால் அது இனப்பிரச்னையின் தீர்வொன்றுக்கு வழிவகுக்குமா? என்று திரு குணவர்த்தனவிடம் கேட்கப்பட்டபோது அவர் 'அத்தகையதொரு தேர்தல் தற்போது எழுந்துள்ள சில புரிந்துணர்வற்ற நிலைகளை நீக்கிவிடுவதுடன் சில குழுவின பராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத நிலையும் அப்போது அகன்றுவிடுமென கூறினர்.

இலங்கை அரசின் உத்தேச மாகாணசபைத் திட்டத்தை மக்கள் ஐக்கிய முன்னணியும் எதிர்த்து வருவது குறிப்பிடத்தக்கது. [கூ-ஊ]

## 16 இளைஞர்கள் கைது

கொழும்பு, ஞாயிறு

மட்டக்களப்பு மாமாங்கம் பகுதியில் ரோந்துசென்ற பாதுகாப்புப் படையினர் பதினாறு தமிழ் இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக அரசாங்கம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் எல் ரி ரி ஈ. ஈ. பி. ஆர் எல் எவ் ஈரோஸ் புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களென்றும் அரசாங்க அறிக்கை தெரிவிக்கிறது

இதேவேளை பொலநறுவ மாவட்டத்தில் திருகோணமடு, சதிரவேலு அகதிமுகாமிலிருக்கும் 6 இளைஞர்களை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். நிராவியடி கடையிற் சுவாமி உமாபதிச் சிவாலய தேவஸ்தான அலங்கார உற்சவ இலட்சார்ச்சனையும் ஹோமமும் 27ம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது. (வா)

## மின்வலிப்பு சிகிச்சைக்கு ஒக்ஸிஜன் இல்லை

யாழ்ப்பாணம், திங்கள்

தெல்லிப்பழை ஆஸ்பத்திரியிலுள்ள மனநோயாளர்கள் மின்வலிப்புச் சிகிச்சை பெறுவதற்கு ஒக்ஸிஜன் இல்லாததனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மனநோயாளர் பகுதியில் நோயாளர் அதிகரித்துள்ளதாகவும், இவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு மின்வலிப்புச் சிகிச்சையளிக்க முடியாத நிலை இருப்பதாகவும்ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. [க]

## முகாம் சென்றவர் தடுத்து வைப்பு

வவனியா, ஞாயிறு

தனமயனின் மரணம குறித்து இராணுவத்தினருக்கு அறிவிப்பதற்காக முகாம் சென்றவர் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மாங்குளம் இராணுவ முகாமிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இருதினங்களுக்கு முன்பு ட்ராக்டரில் செல்லும் பொழுது வவனியாவுக்கும் புதூருக்குமிடையில இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட செல்வராசா என்பவரின் சகோதரரே இவ்வாறு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ரா)

## அடுத்த மாத முடிவுக்குள் நிறைவேற்றப்படும் - ஜனாதிபதி

கொழும்பு, ஞாயிறு.

இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான அரசின் ஆலோசனைகள் அடுத்த மாத முடிவுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படுமென ஜனாதிபதி ஜெயவர்த்தன கூறியுள்ளார் எதிர்க்கட்சிகளின் ஆதரவு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அரசாங்கம் இப்பிரச்னையைத் தீர்த்துவைக்குமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

களுத்துறை நகரமண்டபத்தில் இன்று நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துளளார்.

ஐ தே.க. உறுப்பினர்களுக்கு அரசின் உத்தேச மாகாண சபைத் திட்டம்பற்றி விளக்கிக் கூறுவதற்காகவே இக்கருத்தரங்கு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

இனப்பிரச்னைக்கு இறுதித் தீர்வொன்று காணப்படு முன்னர் எதிர்க்கட்சியிடமிருந்தும், இதுவிஷயத்தில் அக்கறையுள்ள ஏனையோரிடமிருந்தும் அபிப்பிராயங்களை அரசாங்கம் கேட்டுக்கொள்ளுமெனத் தெரிவித்த ஜனாதிபதி இந்த யோசனைகள் கடந்த 60 ஆண்டுகளாக நிலவிவரும் பிரச்னையைத் தீர்த்துவைக்கும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

### நிதி அமைச்சர் கருத்து

இக்கருத்தரங்கில் நிதி, திட்டமிடல் அமைச்சர் ரொனி டி மெல் உரையாற்றுகையில், நிர்வாகத்தைப் பரவலாக்கும் நடவடிக்கையில் இனியும் தாமதம் ஏற்பட்டால் சைபிரஸைப் போன்று எமது நாடும் பிளவுபடக்கூடும் எனக் கூறினர். [ஊ]

## தமிழர் கலை, இலக்கிய கலாசாரச் சீரழிவை தடுக்க மினிசினிமா சங்கம் முடிவு!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பகுதிகளில் உள்ள மினி சினிமாக்களில் தமிழர்களின் கலை, இலக்கிய, கலாச்சாரங்களுக்குச் சீரழிவை ஏற்படுத்தக் கூடிய சினிமாக்கள் காட்டப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் மினி சினிமாக்களின் உரிமையாளர்கள். ஒன்று கூடி இத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்'

யாழ்ப்பாணத்திலுள்ள சகல மினி சினிமா உரிமையாளர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

''மினி சினிமா ஒன்றியம்'' என்ற அமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

சுகாதார வசதி இல்லாத, மலசலகூட வசதி இல்லாத, மினி சினிமாக்கள் அவ்வசதிகளை விரைவில் ஏற்படுத்த வேண்டும் என்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

## கொழும்பு வரத்தவறும் வடக்கு - கிழக்கு அரச ஊழியர்மீது நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

வடக்கு கிழக்கு மாகாணங்கள் சென்றுமீண்டும் கொழும்புக்கு கடமைக்கு சமூகம் அளிக்கத் தவறும் அரச ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு எக்காரணம் கொண்டும விசேஷலீவு வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமது இருப்பிடங்களை நோக்கிச் சென்றுள்ள அரச ஊழியர்கள் பலர், பலமாத காலமாகியும் கடமைக்குச் செல்லவில்லை எனவும் தத்தமது பகுதி உதவி அரச அதிபர்கள் ஊடாக லீவுவேண்டி விண்ணப்பித்து வருவதாகவும் அறியப்படுகிறது.

மன்னார், வவனியா மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம், கொக்காவில் ஆகியப்பகுதிகளைச் சேர்ந்தவர்களே தமது பகுதியில் வன்செயல் சம்பவங்களின் பாதிப்புக்களைக் காரணம் காட்டி லீவுக்கு விண்ணப்பித்து வருகிறார்களாம் [கூ-எ]

## ஒருவர்பலி

[மட்டக்களப்பு நிருபர்]

மட்டக்களப்பு செங்கலடிச் சந்தியில் ரோந்துசென்ற அதிரடிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டார்; ஒருவர் காயமடைந்தார்.

மேலும் அப்பகுதியைச்சுற்றி வளைத்த அதிரடிப்படையினர் 15 க்கு மேற்பட்டவர்களைக் கைதுசெய்தனர்.

நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு இ போ ச. டிப்போவைச்சேர்ந்த மெக்கானிக் மகேந்திரன் (22வயது) என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர். மற்றும் இரு பிள்ளைகளின் தந்தையான தம்பிராசா (40 வயது) படுகாயமடைந்தவர். [மா]

## பொருட்களின் விலைவிபரம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்.வர்த்தக சங்கத்தால் வெளியிடப்பட்ட ''வர்த்தகன்'' பத்திரிகையில் வெளியான பொருட்களின் விலைவிபரம்:-

1 கிலோ அரிசி [தரம்-1] 9 50, 1 கிலோ அரிசி [தரம்-2 7 50, 1 கிலோ மா 7 90, 1 கிலோ உ-கிழங்கு 20.00, 1 கிலோ மிளகாய் 34 00 1 கிலோ வெந்தயம் 17 00. 1 கிலோமல்லி 17 00, 1கிலோ 1 கிலோ நற்சீரகம் 37 00, 1 கிலோ மஞ்சள் 45 00, 1 கிலோ கடுகு 40 00, 1கிலோ உ பருப்பு 2 000. 1கிலோ மை பருப்பு 29 00, சி.வெங்காயம 8 50, 1கிலோ பி வெங்காயம் 9 00, 1கிலோ தேயிலை (தரம்-1) 45 00, 1 கிலோ சர்க்கரை 16 00. 1 கிலோ கோப்பி [தரம-1] 95 00, 1 கிலோ கோப்பி [தரம் -2] 85 00, 1 கிலோ மிளகு 120 00, 1கிலோ வெ பூடு 25 00, 1 கிலோ உப்பு1 00. 1கிலோ புளி22 00 1கிலோ சீனி 14 00, 1 லீற்றர் தேங்.எண்ணெ 8 50, 1போத்தல் தேங்.எணணெ 7 00 (ச)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.

## மரண அறிவித்தல்

### கிறேஸ் அரியமலர் சான்டேர்ஸ் [Sanders]

காலஞ்சென்ற ஜேக்கப் செல்லையா அருளம்பலத்தின் மனைவியும், காலஞ்சென்ற பூமணி, திருமதி [Dr] ருகமணி அமரசேகர [சண்டி] ரூபேட் [இளைப்பாறிய கடற்படை உத்தியோகத்தர்], L ( அருளம்பலம் [ஓமான்] தவமணி, யோசெப், ஸ்ரீமணி குலேந்திரா, முத்துமணி ஸ்பென்ஸர் ஆகியோரின் அன்புத்தாயார் இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் நல்லடக்கம் 4, Rajapihilla Terrace [ராஜபிகில்ல டேரஸ்] அம்பிட்டிய ரோட், கண்டி முகவரியில் நடைபெறும்.

தகவல்:
H T யோசெப்,
சோமசுந்தரம் அவெனியு, சுண்டுக்குளி.

[C 4243]

### சவரிமுத்து அன்னம்மா

சில்லாலை திருமதி சவரிமுத்து அன்னம்மா காலமானார் இவர்காலஞ்சென்ற சவரிமுத்துவின் அன்பு மனைவியும், மரியநாயகம், [சில்லாலை வித்தியாலய அதிபர்] லோலன்ஸ், மேரியோசவ், மரியராணி, வேதநாயகம் சவூதி அரேபியா, ரூஜேஸ் ஆகியோரின் அன்புத்தாயாரும், கிளாறம்மா, [ஆசிரியை] வெலிஸ்ரஸ், திரேசாபுஸ்பம், சேவியர் வற்றிமா, விக்ரர் விருன்ஸ், ஆகியோரின் அன்புமாமியுமாவார். அன்னாரின் பூதவுடல் 25-ம் திகதி மாலை 4 மணியளவில் சில்லாலை கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும், உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். [C-4246]

### திருமதி இராசம்மா நாகலிங்கம்

காலஞ்சென்ற உடுப்பிட்டி செல்லத்துரை நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் [கொழும்பு விவேகானந்தா கல்லூரி ஆசிரியர்] சக்திவேல் [இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம் மின் அத்தியட்சகர்] சுசீலாதேவி ஜெயரத்தினம் ஆகியோரின் அன்புத்தாயாரும், Dr S. ஜெயரத்தினம் காலஞ்சென்ற பத்மாவதி, ரஞ்சனி ஆகியோரின் மாமியாரும், குலேந்திரன், சித்திரா, சுகந்தி சுகிர்தினி, பிரபா, ஜெயசுமங்கலா ஆகியோரின் பாட்டியாருமாகிய இராசம்மா காலமானார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 25-8-1986 பிற்பகல் 1-00 மணிக்கு இலக்கம்: 14, இராசாவின் தோட்டம் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: நா. சக்திவேல்,
யாழ்.மின்சாரசபை.

14, இராசாவின் தோட்டம்வீதி'
யாழ்ப்பாணம். (C-4249)